**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No. 251/2019**

பெயர் : ராஜாபிரதாப்சிங்

த/பெ. : தனபால்

தேதி : 04.03.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

எனது வயது 29 ஆகும். என்னுடைய தந்தை தனபால் அவர்கள் மோட்டார் விபத்தில் இறந்ததற்காக நஷ்ட ஈடுகோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன், எனது தம்பி ஜோசப் சுந்தர் சிங் தற்போது மேஜர் ஆவார். எனது தந்தையாரின் தாயார் பாக்கியம் தற்போது உயிருடன் இல்லை,. அவரது இறப்பு சான்றிதழினை நான் தாக்கல் செய்யவில்லை. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது நான் தான். அதன் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. நான் புகார் கொடுத்தது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான லாரியின் பதிவெண் TN 47 AR 3756 என்ற வாகனத்தின் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் புகாரினை பதிந்து தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் லாரியின் ஓட்டுனர் ராஜாராமன் மீது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 145/2020 என்பது நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் அரசு தரப்பு சாட்சி எண் 1 ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதே வழக்கில் விபத்தை பார்த்தவராக சாட்சியம் அளித்தவர் எனது சித்தப்பா லாசர் PW2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எங்களுக்கு பிறகு PW3 CRM Water Service அதன் உரிமையாளர் செந்தில் என்பவர் விசாரிக்கப்பட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

குற்றவியல் வழக்கு என்ன ஆனது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் ஆமாம். அந்த எதிருரையில் குற்றவியல் வழக்கு முடிந்துவிட்டது என்ற விபரம் உள்ளதை நான் படித்துத் தெரிந்துகொண்டேன். மேற்படி எதிருரையில் CC 145/2020 என்ற வழக்கின் தீர்ப்பு நகல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது உறவுக்காரர் லாசர் என்பவரும் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையில் நானும் எனது சித்தப்பா லாசரும் புகார் கொடுக்க சென்றோம். விபத்து நடந்த இடம் NH45 என்றால் சரிதான். அந்த சாலை திருக்கடையூர் மெயின் ரோடு காரைக்காலிலிருந்து சிதம்பரம் செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். சம்பவ இடம் அபிராமி ே◌ஹாட்டல் மற்றும் CRM Water Service உள்ள இடம்

என்றால் சரிதான். குற்றவியல் வழக்கில் PW3 & PW4 ஆகிய இருவரும் CRM Water Service கடைக்கு சம்பந்தப்பட்டவர்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

அந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் PW3 & PW4 ஆகியோர்கள் ஆவார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தனபால் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு திடீரென்று சாலையின் குறுக்கே ஓடி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் CRM Water Service கடையின் CCTV கேமராவில் பதிவாகி உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் புகார் கொடுத்து பதியப்பட்ட குற்ற வழக்கான CC 145/2020ல் மேற்படி CCTV கேமராவில் பதிவான விபத்து சம்பந்தமான சாட்சிகள் பதிவிறக்கம் செய்யப்பட்டு 65(B) (4) இந்திய சாட்சிய சட்டத்தின் படி சான்றுகள் மற்றும் குறுந்தகடு இரண்டும் எ.த.சா.ஆ 1, எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் மேற்படி எ.த.சா.ஆ.2 குறுந்தகடு பதிவிறக்கம் செய்தவர் எதசா1 ஆக சுந்தர் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தானாகவே அவருக்கு தெரிந்த காரணத்திற்காக திடீரென்று சாலையின் நடுவே வருகின்ற வாகனத்திற்கு எதிரே ஓடி தானாகவே இந்த விபத்தை அவர் தன் உயிரை மாய்த்துக்கொள்ள ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற உயிரை மாய்த்துக்கொண்ட நபரின் இறப்பிற்கு தாங்கள் எந்தவித நஷ்ட ஈடும் 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டின் கீழ் கோர இயலாது என்றால் இது விபத்து என்பதால் நஷ்ட ஈடு கோர உரிமை உண்டு. மேற்படி வழக்கில் தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இந்த சம்பவமானது தனபால் அவர்கள் சாலையின் குறுக்கே திடீரென்று ஓடி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என தெரியவருகிறது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ராஜாராம் என்பவர் குற்றவாளி இல்லை என்று CC 145/2020 என்ற வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் இது விபத்துதான். எனது தகப்பனாரின் வயதை குறிக்க பிறப்பு சான்றிதழ், ஆதார் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனதுதகப்பனாருக்கு இறக்கும் போது 65 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் 60வயதிற்குள் தான் இருக்கும். எனது தகப்பனாரின் வருமானத்தை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பிண ஆய்வறிக்கையில் வயது 63 என்று உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் முன்பு திடீரென ஓடிச்சென்று தனது உயிரை மாய்த்துக்கொண்ட சூழ்நிலையில் சம்பவ இடம் கடைத்தெருவாக இருந்தபோதிலும் வேறு நபர்கள் அதில் சாட்சியாக சேர்க்காமல் நானும் எனது சித்தப்பாவும் உண்மையை மறைத்து விபத்து என்று காவல் துறையில் பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

அதனால் தான் நீதிமன்றம் அந்த சம்பவத்தில் இருந்த CCTV பதிவினை எடுத்து சாட்சி ஆவணமாக அதனை பார்வையிட்டு, பரிசீலனை செய்து, மேற்படி சம்பவம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் ஏற்படுத்திய விபத்து இல்லை என்று

முடிவுக்கு வந்தது என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரிந்தும் எனது தகப்பனார் இறப்புக்கு ஆதரவாக தவறான தகவல்களை கொடுத்து நஷ்ட ஈடு கோர இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவானது நிலைநிற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தனபால் அவர்கள் தன் உயிரை தானே தனக்கு தெரிந்த காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் முன்பு சென்று உயிரை மாய்த்துக்கொண்ட காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரருக்காக காப்பீட்டின் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் சாலை விபத்து கிடையாது என்றால் சரியல்ல. இந்த சம்பவம் என்பது இறந்துபோன தனபால் அவர்கள் செய்துகொண்ட தற்கொலை என்றால் சரியல்ல. அதனால் தான் குற்ற வழக்கு வாகன விபத்து இல்லை என்று முடிவுசெய்து ஓட்டுனர் ராஜாராம் என்பவரை விடுதலை செய்துள்ளது என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.